விலை: சதம் 75

எம்மிடம்.....
உள்ளூர், வெளியூர்
காப்பற் வகைகள் (Floor)
லொறிகளுக்கு
பொடி அடிக்கும்
(F) பிற்றிங்ஸ்.....
மெழுகுசீலை வகைகள்
இன்னும் பல பொருட்கள்
நியாய விலையில் கிடைக்கும்.
H. ESMAILJEE & Co
71-73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். போன்: 8016

ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆடி 15 | றம்ழான் 27 | இதழ் 166
யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 30-7-1981

இலங்கை ஒட்டுப்பலகை
கூட்டுத்தாபனம், தங்களது
விற்பனை முகவர்களாக
எம்மை நியமனம் செய்துள்ளது.
உங்களுக்குத் தேவையான
சிப்போட், பினேவூட்
வகைகளுக்கும்
கதவுகளுக்கும்
ராம்ஸன்ஸ்
ஹாட்வெயர் ஸ்டோர்ஸ்
19, டொன்லி ரோட், யாழ்ப்பாணம்.

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள

ஆறு பொலிஸ் நிலையங்களை

மூடிவிட உத்தரவு!

ஐ. ஜி. பி. நடவடிக்கை

இராணுவத்தினர் அழைக்கப்பட்டுள்ளனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் ஆறு பொலிஸ் நிலையங்களைத் தற்காலிகமாக மூடி விடுமாறு பொலிஸ் மாஅதிபர் திரு. அனு செனிவிரத்ன உத்தரவிட்டுள்ளார். இந்த ஆறு பொலிஸ் நிலையங்களிலும் கடமையாற்றிய பொலிசாரை ஏனைய பொலிஸ் நிலையங்களுக்குப் பகிர்ந்து அனுப்புமாறு பொலிஸ் மாஅதிபர் வடபிராந்திய பிரதி பொலிஸ் மாஅதிபருக்கு அறிவித்துள்ளார்.

இவை, சங்கானை, ஆனைக்கோட்டை, கோப்பாய், குருநகர், நெடுந்தீவு ஆகிய பொலிஸ்நிலையங்களைத் தற்காலிகமாக மூடிவிடுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கூட்டுப் பாதுகாப்பு நடவடிக்கை

யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையப் பாதுகாப்புச் சம்பந்தமான ஏற்பாடுகளைப் பொலிஸாருடன் இராணுவத்தினரும் சேர்ந்து கவனித்துவருகின்றனர்.

யாழ். பொலிஸ் நிலையத்தின் முன்பாகக் கவசப்படை வண்டிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

45 பொலிசார் கொழும்பு சென்றனர்

நிலைமை இவ்வாறிருக்க, யாழ். பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சுமார் 45 பொலிஸார் நேற்று முன்தினம் கொழும்பு சென்றுள்ளதாகத் தெரியவருகிறது.

இவர்கள் அனைவரும் லீவு எதுவும் எடுக்காமல் திடீரெனக் கொழும்பு புறப்பட்டதாகத் தெரியவருகிறது.

விசாரணை ஆரம்பம்

கொழும்பிலிருந்து வந்த இரகசியப் பொலிஸ் கோஷ்டியினர், ஆனைக்கோட்டைச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இக்கோஷ்டியினர் காயம் அடைந்த பொலிஸாரை யாழ். ஆஸ்பத்திரிக்குச் சென்று பார்த்ததுடன், ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலையத்திற்கும் சென்றிருந்தனர்.

தேடுதல் வேட்டை

ஆனைக்கோட்டையைச் சுற்றியுள்ள கிராமங்களில் பொலிஸாரும், இராணுவத்தினரும் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர். கடற் பிராந்தியப் பகுதியிலும் பலத்த கண்காணிப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முக்கிய சந்திகளில் வாகனங்கள் பலத்த

[6ம் பக்கம் பார்க்க]

பாதுகாப்பு நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]

வடபகுதியிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நேற்றுமுன்தினம் நடந்த உயர் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

இம்மாநாட்டில் யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி.விஜயகோன், யாழ்.மாவட்டத் தலைவர் திரு. சு. நடராசா யாழ். மாவட்ட சபை செயலாளர் திரு. நேசையா தேவநேசன், பிரதி பொலிஸ் மாஅதிபர் திரு. நவரத்தினம், யாழ். பொலிஸ் அதிபர் திரு. மஹத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இம்மகாநாட்டில் ஆலோசிக்கப்பட்ட விஷயங்கள் எல்லோராலும் திருப்திகரமாக ஏற்றுக் கொள்ளப்பட்டதாகத் தெரியவருகிறது.

யாழ். மாவட்ட அமைச்சர் திரு. விஜயகோன், மாவட்ட சபைத் தலைவர் திரு. சு. நடராசா, செயலாளர் திரு. நேசையா தேவநேசன் ஆகியோர் நேற்றுமுன்தினம் வடபிராந்திய பிரதி பொலிஸ் மாஅதிபர் திரு. நவரத்தினம், பொலிஸ் அதிபர் திரு. மஹத் ஆகியோரை சந்தித்து ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத்தாக்குதல் குறித்து பலத்த கண்டனம்தெரிவித்தனர். இனி மேல்இப்படியான சம்பவங்கள் நடைபெறாது உடன் நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொண்டனர்.

மாவட்ட அமைச்சரும், மாவட்ட தலைவரும், மாவட்ட

[6-ம் பக்கம் பார்க்க]

சம்பளப்பணம் ரூ.2,35,000 துப்பாக்கிமுனையில் கொள்ளை

[மட்டக்களப்பு]

தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வழங்கப்படுவதற்காக எடுத்துச் செல்லப்பட்ட சம்பளப் பணம் 2 லட்சத்து 35 ஆயிரம் ரூபா துப்பாக்கிமுனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

ஜீப் ஒன்றில் எடுத்துவரப்பட்ட இப்பணத்தை, பொலனறுவை-மட்டக்களப்பு வீதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் றிவோல்வர் முனையில் கொள்ளையடித்துச் சென்றதாக மட்டக்களப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலனறுவைப் பொலிஸார் இது குறித்து விசாரணை செய்துவருகின்றனர் என்றும் இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர். [இ]

அரிய சந்தர்ப்பம்!

டிப்ளோமா இன் ஹோட்டல் மனேஜ்மென்ற் பயிற்சி—மீண்டும் ஒரு புதிய வகுப்பு ஆரம்பம் 2-8-81. ஓ/எல் அல்லது என். சி. ஜி. ஈ. படித்த இரு பாலாரும் சேரலாம். நேரில் வரவும்.

நாஷனல் அக்கடமி

[அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது]
11, மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். 0466

★ நம்பிக்கை ★ பாதுகாப்பு ★ உத்தரவாதம்
உங்கள் முதலீட்டிற்குப் பாதுகாப்பும் ஆகக்கூடுதலான வட்டியும் வழங்கும் நிறுவனம்
முதலீட்ட நாள் தொடக்கம் 30% மாதாந்தம் வட்டி வழங்குகின்றோம்
"மீளப்பெறுதல்"
நீங்கள் விரும்பும் நேரத்தில் வட்டியைப் பாதிக்காத வகையில் மீளப்பெறலாம்!
ட்ரான்ஸ்லங்கா இன்வெஸ்ற்மென்ட் லிமிட்டெட்
77 1/1, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7027
[மத்திய வங்கி நாணய சபையினரால் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனம்]
பிரதி சனிக்கிழமையும் பிற்பகல் 4 மணி முதல் 4-30 மணிவரை
"இரைதேடும் பறவைகள்" என்னும் நாடகத்தைக்கேட்கத் தவறாதீர்கள்

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

புலோலி தெற்கில் பிரபல்ய மான பகுதியில் நாலு அறை களுக்கோண்ட நவீன கல்வீடு வளவு விற்பனைக்குண்டு. காணிக்குள் தனியான கிணறு, இரு பக்கமும் சுற்றிமதில், பிரயோசனமான மரங்கள் நாட்டப்பட்டுள்ளன. காணி ஆறரைப் பரப்பு. வீட்டின் ஒரு அறையில் கிராமசேவையாளர் காரியாலயம் உண்டு. விபரங்களுக்கு டாக்டர் எஸ். பகவதிராஜா, மே/பா, சட்டத்தரணி சே. குணரெட்ணம் வட்டுக்கோட்டை கிழக்கு, வட்டுக்கோட்டை. தொலைபேசி: 216 (0461)

நல்ல இன முத்திரைக் கன்றுகளும் நல்ல இன தென்னங்கன்றுகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: அண்ணாபாம், இணுவில். 0455

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் தீர்த்தத் திருவிழாவை முன்னிட்டு கீரிமலையில் அமைந்திருக்கும் எமது அன்னை கோப்பி விளம்பர நிலையத்தில் எமது அதியுன்னத தரமான கோப்பி, அன்னா பற்றோடி, அன்னா தேயிலை, அன்னா பத்தி, ஜெயந்தி பத்தி, சோயாற்றில் புளும் பவுடர் ஆகிய பொருட்களில் ஏதாவது ஒன்றினை வாங்கி அத்துடன் எமது அரிய, பெரிய இனாம் பொருட்களையும் பெற்றுக் கொள்ளுங்கள். 6454

தேவை

நல்ல சுற்றுடலுடன் அமைந்த வீடு கட்டக்கூடிய காணி தேவை. விபரங்கட்கு: க. தம்பிமுத்து, 268/5, நாவலர் ரோட், ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 0452

மட்டக்களப்பு

இ. த. ஆ. சங்கம் 2ம் திகதிகூடுகிறது

(மட்டக்களப்பு)

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு வடக்கு வட்டாரக்கிளைக்கூட்டம் எதிர்வரும் 2ம் திகதி கிளைத்தலைவர் திரு. க. தங்கவேல் தலைமையில் விக்சன்ற் கலைமகளிர் உயர்தர பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கோழிப்பண்ணை வேலைகள் பூர்த்தி

(மட்டக்களப்பு)

பிராந்திய அபிவிருத்தி அமைச்சினால் மட்டக்களப்புத் தொகுதியில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களில் ஒன்றான பாரிய கோழிப் பண்ணைக் கட்டிட வேலைகள் பூர்த்தி அடையும் நிலையிலுள்ளன.

சத்துருகொண்டான் படிந்த மகளிர் குடியேற்றத்திட்டத்திற்கு அருகாமையில் மேற்படி பண்ணை அமைந்துள்ளது. [அ]

கடாபியை கொலை செய்ய திட்டமாம்!

நியூயோர்க், ஜூலை, 29

லிபியத் தலைவர் முஅம்மது கடாபியை கவிழ்க்கவும், படுகொலை செய்யவுமான ரகசியத் திட்டம் ஒன்றை சி. ஐ. ஏ. வகுத்துள்ளதாக பிரபல அமெரிக்க சஞ்சிகையான 'நியூஸ் வீக்' அறிவித்துள்ளது.

அமெரிக்க காங்கிரஸ் வட்டாரங்களை ஆதாரம் காட்டி எழுதும் இச்சஞ்சிகை, காங்கிரஸின் உளவுக் கமிட்டியின் அங்கத்தவர்களுக்கு இத்திட்டம் பற்றித் தெரியும் என்று குறிப்பிடுகிறது.

கடாபியை ஆட்சியிலிருந்து கவிழ்ப்பதுமட்டுமல்ல, அவரை படுகொலை செய்யவும் சி. ஐ. ஏ. திட்டமிட்டுள்ளதாம்.

"சுதந்திரா ஆட்சிக்குவரும்"

(வேலணை)

"ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அடுத்த முறை ஆட்சிக்கு வருவது நிச்சம், அது பதவிக்கு வந்தவுடன் வேலை நிறுத்தத்திலீடுபட்டு வேலையிழந்த சகல இ. போ. ச. ஊழியர்களுக்கும் சம்பள பாக்கியுடன் வேலை வழங்கும்".

மேற்கண்டவாறு தீவுப்பகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் திரு. ப. எதிரவேலுஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வடபிராந்திய இ. போ. ச. தொழிற்சங்கக் கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் இ. போ. ச. ஊழியர்கள் அனைவரும் எமது தொழிற்சங்கத்தில் கீழ்க்கண்ட அணிதிரண்டு தமது உரிமைகளுக்காகப் போராட வேண்டும்" என்றார். [வெ]

இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத்தலைவர் திரு. டி. எஸ். சே. வசந்திராவும் செயலாளர், திரு. த. மகாசிவமும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டார்கள். (அ)

அபிவிருத்திசபைக்கூட்டம்:

பண்டிதர், இராஜலிங்கம் கிளப்பிய பிரச்னை

[யாழ்ப்பாணம்]

கடந்த கட்டத்தில் தாங்கள் பேசிய முக்கிய விடயங்கள், சென்ற கட்டத்தில் இடம் பெறவில்லை என்றும், இனிமேல் தங்கள் பேச்சுக்களும் இடம்பெறவேண்டும் என்றும் பண்டிதர் க. பொ. இரத்தினம், திரு. கே. இராஜலிங்கம் ஆகியோர் யாழ். மாவட்டசபை தலைவர் திரு. சு. நடராசாவிடம் கேட்டுக் கொண்டனர்.

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திசபை கட்டம் நேற்று முன்தினம் சபைத் தலைவர் திரு. சு. நடராசா தலைமையில் ஆரம்பமானது.

இளிறொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி கூட்டத்தில் கலந்துகொண்டபோதிலும், தீர்மானங்கள் தொடர்பான வாக்கெடுப்பில்கலந்துகொள்ளவில்லை; பேசவுமில்லை.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திசபை தலைவர் திரு. ஜ. எஸ். மரியநாயகம், உறுப்பினர் திரு. கே. தம்பாபிள்ளை ஆகியோர் பார்வையாளராகக் கலந்துகொண்டனர்.

சென்ற கூட்ட அறிக்கை உறுதிப்படுத்தும் விஷயம் ஆரம்பமானதும் திரு. கே. இராஜலிங்கம், கடந்த கூட்டத்தில் நான் பேசிய முக்கிய விடயம் இடம்பெறவில்லையென்றார்.

அதுபற்றி கடந்த கூட்டத்தில் தானும் இவ்விடயம் குறிப்பிட்டதாகவும், அதுவும் இடம்பெறவில்லையென்றும் தெரிவித்தார்.

பண்டிதர் க. பொ. இரத்தினம்: வேறு விடயங்களில் பேசும்போது பேச்சுகளை அறிக்கையில் சேர்த்தால் நல்லது.

தலைவர்: இன்றுள்ள நிலையில் அப்படிச் செய்வது கஷ்டம். நடவடிக்கைகளை முழுவதும் அறிக்கையில் சேர்க்கமுடியாது.

பண்டிதர் க. பொ. இரத்தினம்: முன்னைய விடயம் சேர்க்கப்படவேண்டும்.

தலைவர்: பேச்சுக்கள் இடம் பெறுவது கஷ்டம்.

கே. இராஜலிங்கம் (எம்.பி): உறுப்பினர்கள் கேட்டதுபோல, தமிழுக்கு பேசிய பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன. அதே போல் எம் பேச்சுக் இடம் பெறவேண்டும். நான் குறிப்பிட்டது முக்கியம்.

தலைவர்: இனிமேல் அது பற்றி நடவடிக்கை எடுக்கப்படும். [அ]

இந்த ஆசிரியர்களுக்கு பட்டதாரிச் சம்பளம்

[யாழ்ப்பாணம்]

பட்டதாரிச் சம்பளம்பெறாத சேவையிலுள்ள வர்த்தக பட்டதாரிப் பட்டம், வர்த்தக டிப்ளோமா பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு, பட்டதாரிச் சம்பளம் கிடைக்கவுள்ளது. கல்வி அமைச்சு இவ்வாறு தீர்மானித்துள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்தவர்.

77 ம் ஆண்டிலிருந்து மேற்படி பட்டம் பெற்ற பல ஆசிரியர்களுக்கு பட்டதாரிச் சம்பளம் வழங்கப்படவில்லை என்றும், அவர்களுக்குப் பாக்கிச் சம்பளத்துடன் பட்டதாரிச் சம்பளம் வழங்கவேண்டுமெனவும் இ. த. ஆ. சங்கம் கல்வி அமைச்சைத் தொடர்ச்சியாகக் கோரி வந்ததுடன், தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்தி வந்தது. அக்கலந்துரையாடலின்போதே அமைச்சு அதிகாரிகள் பாக்கிச் சம்பளம் வழங்குவதற்கு நிதிநெருக்கடியில் நிதி நிலைமை உகந்ததாக இல்லையென்றும். எனவே பாக்கிச் சம்பளம் இல்லாது 1981 ஜூலை 1 ம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தக்கூடியதாக வர்த்தகப் பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கும், வர்த்தக டிப்ளோமாப் பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கும் பட்டதாரிச் சம்பளம் வழங்கப்படுமெனவும் தெரிவித்தனர்.

இதேசமயத்தில் ஆங்கிலம், கணிப்பாடங்களில் பட்டம் பெற்ற பட்டதாரிச் சம்பளம் பெறாத ஆசிரியர்களுடைய நிலை தொடர்பாக போதுச் செயலாளர் பிரஸ்தாபித்த போது இவர்களிடங்களுடைய விபரங்கள் திரட்டப்பட்டுவருவதாகவும், சகல கல்வித் திணைக்களங்களும் விபரம் தந்தவுடன் அவர்களுக்கும் பட்டதாரிச் சம்பளம் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அமைச்சு அதிகாரிகள் தமிழர் தெரிவித்துள்ளதாக திரு. த. மகாசிவம் தெரிவித்தார். [மா]

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல MB 10

சண்முகம் பொன்னம்பலம் கிளுவனை காரைநகர்
எதிராக வழக்காளி
சின்னத்தம்பி முருகேசு அந்திரான் களபூமி காரைநகர்.
எதிராளி

ஊர்காவற்றுறை டிஸ்றிக் கோட்டின் M B 10-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் தண்டுக்காணி 1981-ம் ஆண்டு ஆவணி மீ 11-ம் திகதி செவ்வாய்க்கிழமை பி. ப. 1-45 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபா 6549/- பின் 2-10-79 தொடக்கம் 2-5-80 வரைக்கும் ரூபா 5000/-க்கு 10% வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகையும் இறுபடும் வரைக்கும் 5 % வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 629 சதம் 40

ஆதனவிபரம்

வடமராட்சி வடமராட்சி யாழ்ப்பாணம் டிஸ்றிக் தீவுப்பகுதி காரைதீவு கோவிற்பற்று காரைதீவு கிழக்கிறை 'அந்திரான்' நிலப்பரப்பு 10 பத்தும் வீடும் கிணறும் பனைகள் வடலிகள் மற்றும் வாக்கியிர் செய்யப்பயிர்களும் எல்லை கிழக்கு பொன்னையா இராமநாதனின் ஆதனம், வடக்கு கிழக்கு பனை வள்ளியம்மைக்கும் சோமசுந்தரம் பெரிய செல்லாச்சிக்கும் உரிய ஆதனங்கள் மேற்கு இராசா கந்தையாவுக்கும் வேலுப்பிள்ளை பேரம்பலத்துக்குமுரிய ஆதனங்கள் தெற்கு வேலுப்பிள்ளை தர்மலிங்கத்தின் ஆதனம் இதுகளும்.

சி. சோ. நரசிங்கம் J P.
நீதிமன்ற விற்பனையாளரும்
மதிப்பாளரும்

தொல்புரம்
29-5-81

0462

மிகக் குறைந்த கையிருப்பு மட்டுமே!
பழைய விலைகளில்

கவசாக்கி - KAWASAKI

மோட்டார் சைக்கிள்கள்

KH 100 EL	-	12,450/-
Z 200	-	19,650/-
Z 250	-	24,950/-

யப்பானில் பிரபல்யமான உற்பத்தியும், யாழ்ப்பாணப் பகுதிக்கு ஏற்றதுமான மோட்டார் சைக்கிள்கள். முதலில் வருபவர்களுக்கு மட்டும் பழைய விலைகளில் கிடைக்கும்.

★ ★ ★

மிகக்குறைந்த விலையில் மற்றைய ரக்டர்களுக்கு இணையாக, யாழ்ப்பாணத்தில் விற்பனையாகின்றன.

EICHER TARCTOR

ஐசர் ரக்டர்

- இலாபகரமானது,
- கலபமான இயக்கும் சக்தி,
- நவீன சாதனங்கள் இணைக்கப்பட்டது,
- டீசல் குறைவாகத் தேவைப்படுவது,
- எவரும் இயக்கலாம்,
- ஒருவருட உத்தரவாதம்.

ஒவ்வொரு விவசாயியும் குறைந்த முதலீட்டுடன் ஒரு ரக்டருக்கு சொந்தக்காரராகுங்கள்.

விலை 67,900/- மட்டுமே

பினான்ஸ் வசதிகளுமுண்டு

மேலதிக விபரங்களுக்கு:-

P. சோமசுந்தரம் அன் கொம்பனி

293, ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம்.

போன்: 7340

மணிவாக்கு

இந்தக்கமக்காரன் எப்படி இந்த நிலத்தை இவ்வளவு நல்லாப் பண்படுத்தினானோ அது போல ஒவ்வொருவரும் தங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக வைத்திருக்கவேண்டும்.

—யோகஸ்வாமிகள்

நமது நோக்கு

பாதுகாப்பற்ற சமுதாயம்

உலகத் தலைவர்களையும் அரசியல்வாதிகளையும் ஒழித்துக்கட்ட உபயோகிக்கப்படும் துப்பாக்கி இன்று சாதாரண குடும்பங்களுக்கு முற்றாய் ஆபத்தாகவிட உதவியிருக்கிறது.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கம்பர்மலையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்தப் படுகொலையை நடத்திய சோஷ்டியின் எண்ணிக்கையும் ஆறெனத் தெரியவருகிறது.

காரணம் காணித்தகராறால் வளர்ந்த பகைமை என்று சொல்லப்படுகிறது. அது என்னவானாலும் ஒரு ஆயுதச் சோஷ்டி வீடு தேடிச் சென்று நிராயுதபாணிகளை கொண்டிருந்த குடும்பத்தாரை, குடும்பத் தலைவன் தவிர அவருடைய மனைவி, மக்கள், மருமகன் ஆகிய ஆறுபேரை பலவான் படியளக்கும் அதிகாலையில் வேரோடு சாய்த்துவிட்டனர். இப்பகுதி வாழுகிறபடுகொலை இது.

இதனை ஒருதனிப்பட்ட சம்பவமாகக் கருதுவோமானால் நாம் இந்த உலகில் இந்நாட்டில், இம்மாவட்டத்தில் இன்று என்ன நடைபெறுகிறதென்பதை புரிந்து பேசத்தவறினவராம்.

அரசியல் பயங்கரவாதம், அரசாங்கத்தால் கட்டவிழ்த்துவிடும் எதிர் பயங்கரவாதம், கொள்கைக்குரிய கோஷ்டிகள், குடும்பத் தகராறுகள். கோஷ்டிச்சண்டைகள். பழிவாங்கல் போன்றவை அக்கிரமங்களுக்குத் துப்பாக்கியே முடிவு காணுகின்றது.

சட்டத்துக்கமைந்த வாழ்வு சமுதாயக் கட்டுப்பாட்டுக்குரிய பயம், அரசதண்டனைக்கஞ்சும் மனப்பாங்கு - இவை யாவும் இன்றைய சமூக வாழ்வில் அருகி வருகின்றன.

அரசியல் பயங்கரவாதம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமானகாலம் தொட்டு. விரோதி என்பவனைத் துப்பாக்கியால் தொலைத்துவிடும் செயல்கள் மலிந்து வருகின்றன. கலாசிய குளத்தை நாற்றமெடுக்கும்வரை குழப்பி இதற்குப் பரிகாரம் தேடுவதற்கு அரசினர் பாதுகாப்புப்படை, துப்பாக்கியையும் நெருப்பையும் எந்தப்பகைமைக்கும் பழிக்கும் இருசஞ்சீவிகளாக்கி விட்டனர்.

அது அவ்வாறிருக்க எங்கள் சமுதாயவாழ்க்கையில் மோசமான மாற்றத்தை இனங்கண்டு நாமே பரிகாரம் தேட வேண்டும் தம்மைத் தாம் திருத்த முயலுபவர்களுக்கே ஆண்டவனும் உதவுவான்!

பொலிடோல் போன்ற இருமிராஜினி வாதியாய் வைக்கெட்டினால் மனக்குழப்பமுள்ள பலர் நிறப்பாக இன்னூர் - இதன்உதவி நாடி அவ்வுலகம் சேர்கின்றனர். இது இன்றைய அவலநிலை.

அதேபோன்று கட்டுப்பாடில்லாத துப்பாக்கிப்பிரயோகம், எவ்வாறு ஒழிக்கப்படவேண்டுமென்பது அரசின் விடயம்மட்டுமல்ல. பொதுமக்களின் விழிப்புக்குரியது.

கிராம அபிவிருத்தியில் முதல் இடம் பாதுகாப்புக்கு அளிக்கவேண்டும், குறிப்பிட்ட கம்பர்மலைச் சம்பவம், அங்கு விழிப்புணர்வுள்ள பொதுமக்கள் சபை, தொண்டர்சபை ஒன்று செயற்பட்டிருந்தால் எந்தப் பகைமையும் இவ்வளவு தூரத்துக்கு நீண்டிருக்க முடியாது முளையிற் கிள்ளியிருக்கலாம்.

நாம் முன்னே கூறியது போல் இது இன்று உலகளாவிய செயற்பாங்கு! இன்தனிப்பட்ட அக்கிரமமல்ல, சமூகத்தில் மலிந்துவரும் ஊழல், உணவுக்கலப்படம், எவ்வகையிலும் பொருள் தேடும் அற்பத்தனம் - இவையெல்லாம் துப்பாக்கியின் தும் நெருப்பினதும் தூண்டுகோல்கள்!

விதைநெல்

விதைநெல் தேவைப்படும் விவசாயிகள் நிதி தமது பட்டியிலுள்ள விவசாய நிலையங்களில் இம்மாதத்திற்குள் பதிவுசெய்து கொள்ளும்படி கோரப்படுவதாகச் செய்தி குறிக்கின்றது.

நாளை ஒருநாள்தான் எஞ்சியிருப்பதால் விவசாயிகள் அவசரப்பட்டு பதிவுசெய்ய வேண்டியது அவசியம்.

விதையின் தரத்தில் வேளாண்மை பெரிதும் தங்கியிருக்கிறது.

ஏற்றம் தாழ்வற்ற சமுதாயங்பற்றி உயர்மட்டத்தில் நாடுகளின் தலைவர்கள் நன்கு அளக்கின்றனர், வீட்டில் நடப்பது அவர்களுக்குத் தெரியாத விடயமா?

சட்டத்தால் அரசியலமைப்பால் சோஷலிச சமுதாயத்தை உருவாக்குவது பற்றினவெனினும் இன்றைய உலகு கற்பிக்கும் பாடம் பொருள்தேடாமல் சீவியம் நடத்துவது இயலாத காரியம், அத்தியாவசியமான தேவைகளை அரசு வழங்குமென்ற சித்தாந்தத்தில் நம்பி நாம் மூலஉண்மைகளை மறந்துவிடுதல் ஈடாகும்.

தர்மமான முறையில் தம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டும். அவ்வளவில் நின்று வருவதும் தர்மமானது. தம்முடைய பொருளில் மற்றவருக்கும் பங்கு அளிக்க வேண்டும்.

எவ்வித சமுதாயத்திலும் இவ்விரண்டும் ஏற்கப்படவேண்டிய உண்மைகள். இவற்றை மறந்து வாழும் நாடும், சமுதாயமும், பொருக்கும், பூசலுக்கும் இடமளிக்கின்றன.

விதைநெல் எவ்வகையாலும் விளைபுலம் நன்றாக விளையவேண்டுமானால் பசியால் வாடிவருபவர்களுக்கு உதவ நாம் ஆயத்தமாக இருக்கவேண்டும்.

[5ம் பக்கம் பார்க்க]

புதிய ஆயர் இன்று திருநிலைப்பாடு

மன்னாரில் இன்று நிகழும் ஆன்மிகப் பெருவிழா

தமிழ் கிறிஸ்தவர்களின் மகிழ்ச்சி ஆரவாரத்துக்கிடை சிங்களக்கிறிஸ்தவ சகோதரர்களின் அன்புநிறை ஆசிமொழிகிடை - முழு இலங்கை மக்களுமே இறைவனின் ஒரே குலமாக நின்று வாழ்ந்துவரக்கூடிய ஆழமிழுமை இன்று பிற்பகல் 5-30 மணியளவில் மருதமடு அன்னையின் திருச் சமுகத்தில் புதிய மன்னார் மறை மாவட்டத்தின் ஆன்மீகத்தலைவனாக பேரருட் திரு தோமஸ் சவுந்தரநாயகம் அடிகள் திருநிலைப்படுத்தப்படுகிறார். "காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல் மீக்கூறும் மன்னன்நிலம்" என பாராளும் மன்னர்க்கு வள்ளுவன் கொடுத்த வரைவிலக்கணம் இவ் அருளாளரும் ஆன்மீகத் தலைவனுக்கு மிச்சியப்புடையதாக அமைகிறது. எனவே இவ் அதியாளன் அருளாளன் தலைமையில் மன்னார் மறை மாவட்டம் "மீக்கூறும் நிலமாக" திகழும் என்பதில் எவ்வளவும் யாராலும் சந்தேகமில்லை.

தூரநோக்கு, கல்வி, துணிவு வடிவமாக மூன்றுமே வடிவான தோமஸ் சவுந்தரநாயகம் அடிகள் கிறிஸ்துவின் உருவான பண்பினர். இவரை அறிந்த அனைவருமே ஏற்றுக்கொள்ளக் ஒரு உண்மை "கலைமகளின் உயிர்வடிவு இவர்" என்பதே. 12-07-1938ல் ஊர்காவற்றுறையில் திரு மரிசரன் சவரிமுத்து வரப்பிரசாசம் இம்மானுவேல் திருமதி தோமஸ் கவிரியச்சி எலிபவர்களின் அன்பு மகனாக அவதரித்த இவர் ஊர்காவற்றுறை, புனித அந்தோனியார் கல்லூரி யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரி என்பவற்றில் பண்பு உருப்பெற்று யாழ் புனித மாட்டினார் குருமடம், கண்டி தேசிய குருமடம் என பயிற்றில் அருளுருப் பெற்று 21-12-1963ல் கிறிஸ்துவிக்கு மகுடூட்டப்பெற்று குருவாகத் திருநிலை எய்தினார். பெல்லுரிக் மறைக்கல்லூரி டிப்ளோமா படிப்பை முடித்த பின் யாழ் பேராயம், பெரிய விளான், நாவுட்டான், வவுனியா ஆகிய இடங்களில் அன்புப்பணி செய்தார். அறிவுப் பணியாக யாழ் மறை மாவட்ட மறைக்கல்வி நடுநிலைய இயக்குநராக கடமையாற்றினார். இக்காலகட்டத்தில் யாழ். சஞ் யுவானியார் ஆலய பங்குக் குருவராகப் பதிக்கட்டமையாற்றினார். மீளவும் ரோமாபுரி ஊர்பான் பல்கலைக்கழக விவிலிய இறையியல் துறை வளாகத்திலும்பட்டத்தைப் பெற்று இலங்கை திரும்பிய இவர் இவரின்மிக அன்புக்குரியவரான அன்னை மரியாளின் மருதமடுத்திருப்பதியில் இன்று கிறிஸ்துவின் மேய்ப்புத்தலைவனைப் பொறுப்பேற்கிறார். சாந்தமிகு சவுந்தரநாயகம் அடிகளின் தலைமையில் மன்னார் புதியதொரு வரலாற்றைப் படைக்க இன்று புறப்படுகிறது.

மன்னார் புதிய ஆயரின் தலைமையில் அனைவர்க்கும் கிறிஸ்தவத்தின் பெருமையினை வாரி வழங்கும் பெரும்பணியில் சிறக்க இந்நாளில் மருதமன்னையிடம் இரந்து மன்னருடிப்புதிய பேரருட் திரு தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளுக்கு நல்வாழ்த்துக்களை தெரிவிப்போம்.

யாழ். எம். பி செய்தி

மருதமடுத்திருப்பதிக்கு இவ்விழாவில் வந்து கொள்ளவென புறப்படுவதற்கு முன் யாழ். எம். பி. திரு. வெ. யோசேப்பரான் விடுத்த ஆசிச் செய்தியில் "தமிழ்க் கிறிஸ்தவ மக்களின் கனவு இன்று நனவாவது கண்டு மகிழுகிறேன். நீண்டகாலமாகத் தமிழ்க்கிறிஸ்தவர்கள் பலவழிகளிலும் கிறிஸ்தவத்தின் வளர்ச்சிக்கு உதவிய மன்னாரை தனி

(5-ம் பக்கம் பார்க்க)

உங்கள் வைப்புத் தொகைக்கு உயரிய வருமானம் உறுதியான பாதுகாப்பு

22% வரை வருட வருமானம் பெறும் 1 வருட சேமிப்புத் திட்டம்.

27% வரை வருட வருமானப் பெறும் 2 வருட சேமிப்புத் திட்டம்.

மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டட்

இலங்கையில் அதி பெரியதும் உறுதிவாய்ந்ததுமான ஓர் நிதி நிறுவனம்.

மாதாந்தமோ முதிர்ச்சியின் பின்னரோ வருமானம் செலுத்தப்படக் கூடிய திட்டங்களைக் கொண்டது.

பாரிய அளவிலான மூலவளங்களைக் கொண்ட நிறுவனம்

மொத்த ஆதனம் ரூபா 32 கோடிக்கும் மேல் மூலதனமும் ஒதுக்கீடுகளும் ரூபா 4 கோடிக்கும் மேல்

பொது மக்களின் நம்பிக்கையைப் பெற்று மகிழும் நிறுவனம்.

6500 க்கும் அதிகமான வைப்பாளருடன் ரூபா 17 கோடியே 5 லட்சத்திற்கும் மேலான தொகையினை வைப்புப்பணமாகக் கொண்டது.

மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டட்

51, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 1. தொலைபேசி: 26611 - 8.

கிளைகள்:

யாழ்ப்பாணம் : 11/8 ஸ்ரான்லி றோட். தொலைபேசி: 321
மாத்தறை : 27 1/1 தர்மபால மாவத்தை. தொலைபேசி: 2466
அனுராதபுரம் : 2, ஹரிச்சந்திர மாவத்தை. தொலைபேசி: 634
கண்டி : 115, (மம் மாடி) கொட்டுகொட விதி. தொலைபேசி: 4196

"மேலதிக விபரங்களுக்கு எமது யாழ்ப்பாணக் கிளை அலுவலகத்தை நாடவும்"

வேறு தூண்வர்கள் (ஏஜென்ட்யார்) எல்லா முக்கிய நகரங்களிலும் உள்ளனர்.

MASTERS

மேற்கு ஜெர்மன் அரசியல் தஞ்சம் நீதிவிசாரணை நடைபெறுமல் எவரும் திருப்பி அனுப்பப்படமாட்டார்கள்

ஜெர்மன் சென்ஸர் விளக்கம்

பொன், ஜூலை 29

மேற்கு ஜெர்மனியில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளவர்கள் எவரும் நீதிமன்ற விசாரணை நடத்தாமல் அவர்களது நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட மாட்டார்கள்.

இத்தகவலை மேற்குஜெர்மன் சென்ஸர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அரசியல் புகலிடம் கோரியுள்ளவர்களின் தலைவிதியை பெர்லின் அரசு நிர்ணயிக்கும் வரை அவர்கள் மேற்கு பெர்லினிலேயே தங்கியிருக்க அனுமதிக்கப்படுவர் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையிலிருந்து அரசியல் புகலிடம் கோரி இங்கு வந்துள்ளவர்கள் கூறுவதுபோல் இலங்கையில் தமிழர்கள் அவ்வளவு தூரம் கொடுமைப்படுத்தப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

அப்பாவி இலங்கைத் தமிழர்களை மோசடிக் கும்பல் ஒன்று ஏமாற்றி ஜெர்மனிக்கு அனுப்பி வைக்கின்றனர் என்றும் ஜெர்மனியில் உள்ள அகதிகள் முகாம்களில் 2 ஆயிரம் இலங்கைத் தமிழர்கள் அரசியல் புகலிடம் கோரியுள்ளனர் என்றும் அந்த சென்ஸர் கூறினார்.

இதேவேளையில் ஜெர்மன் சென்ற மேலும் 22 இலங்கைத் தமிழர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதற்கான ஏற்பாடுகளை ஜெர்மன் அரசு மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறினார். [இ]

விவசாய அமைச்சர் ராஜினுமா

புதுடில்லி, ஜூலை 29

ஆந்திரா பிரதேச விவசாய அமைச்சர் திரு. பாலிராவ் தமது பதவியை ராஜினுமா செய்துள்ளார்.

ஆந்திரா பிரதேச முதலமைச்சர் கேட்டுக்கொண்டதன் பேரிலேயே தமது பதவியை ராஜினுமா செய்ததாக இவர் தெரிவித்தார். (வெ)

மே ஜெர்மன்

செஞ்சிலுவைசங்க பெண்ணின் பெருந்தன்மை

[யாழ்ப்பாணம்]

"செஞ்சிலுவைச்சங்கத்தினர் எங்களுமதித்து மிகவும் அன்புடனும், அனுதாபத்துடனும் நடந்துகொண்டனர். அவர்களது சேவையை என்றும் மறக்கமுடியாது."

இவ்வாறு மே, பெர்லின் சென்று இலங்கை திரும்பிய வாலிபர் ஒருவர் தெரிவித்தார்.

"எங்களுக்கு உணவு, போர்வை, கோட் முதலியவை தந்தார்கள். அகதிசேவையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த செஞ்சிலுவைச்சங்கத்தைச் சேர்ந்த மாது ஒருவர் நமது கோட்டையும் கழற்றிக்கொடுத்தார், எங்களுடன் அக்கு ஒரு சிங்கள வாலிபரும் இருந்தார்" என்று அவ்வாலிபர் சொன்னார். [கு]

ஒருவாரத்தில் 3 இளைஞர்கள் விபத்தில் பலி!

(மட்டக்களப்பு)

ஒருவாரத்தில் மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் இரண்டு பயங்கர விபத்துகளில் மூன்று இளைஞர்கள் பலியாகினர்கள்!

சைக்கிளில் சென்று கொண்டிருந்த இருபது வயது இளைஞன் பின்னால் வேகமாக வந்துகொண்டிருந்த மினிபஸ் மோதியதால் இளைஞன் ஒருவர் ஸ்தலத்திலேயே துடிதுடித்து மரணமானார் ஒருவர் காயமடைந்தார்.

கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதி புதுக்குடியிருப்பிற்கும், கிராண்குளத்திற்கும் இடையில் நடைபெற்ற இவ்விபத்தில் புதுக்குடியிருப்புவாசியான சின்னத்தம்பி சாமுதேவராசா [20 வயது] என்ற இளைஞர் மரணமானவராவர்.

பிரேதபரிசோதனையை அடுத்து மரணவிசாரணை நடத்திய திரு. த. [வெநாதன்] விபத்து மரணம் என்று தீர்ப்புவழங்கினார். [அ]

"பாகிஸ்தானில்

கெரில்லா யுத்தத்தின் மூலம் 'ஷியாவுல்' அரசைகவிழ்ப்பேன்

பூட்டோவின் மகன் சபதம்

புதுடில்லி, ஜூலை 29

"பாகிஸ்தானில் தற்போது ஆட்சி செய்துவரும் ஜனாதிபதி ஷியாவுல் ஹக்கின் அரசாங்கத்தை கெரில்லா யுத்தத்தின் மூலம் ஆட்சியிலிருந்து கவிழ்க்கப் போகிறேன்."

மேற்கண்டவாறு தற்போது லண்டனில் வசித்து வரும் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் ஜனாப் சுல்பிகார் அலி பூட்டோவின் மகன் இந்திய சஞ்சிகையொன்றிற்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அரசாங்கத்திற்கு எதிராக யுத்தமொன்றை மேற்கொள்வதற்காகப் பல காமோண்டோக்களைத் தற்போது பாகிஸ்தானுக்கு அனுப்பியுள்ளதாகவும் பேட்டியில் தெரிவித்தார்.

இதேவேளை சுல்பிகார் அலி பூட்டோவுக்கு ஆதரவான லுங்கத்தினரிடமிருந்து பாகிஸ்தான் அரசாங்கத்திற்கு எதிரான துண்டுப் பிரசுரங்களை பாகிஸ்தான் அரசு வைப்பற்றியுள்ளது.

கடந்த மார்ச் மாதம் காபூலிலிருந்து ஜெட் விமானம் ஒன்றைத் தனது குழுவினரே கடத்தியதாக அலி பூட்டோவின் மகன் கூறியிருந்தது தெரிந்ததே. [வெ]

திருமணமும் கலவரமும்

லண்டன், ஜூலை, 29

பிரிட்டிஷ் இளவரசர் சார்ல்ஸ் - டயானா சீமாட்டி திருமணத்திற்கான சான ஏற்பாடுகளும் இன்று பூர்த்திசெய்யப்பட்டுள்ள அதேவேளையில் விவாப்பூலில் மோசமான கலவரங்கள் வெடித்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இக்கலவரங்களினால் 20 பொலிசார் தாக்குதலுக்குள்ளாகி பலத்த காயமடைந்தனர், என்று தெரிவிக்கப்பட்டது.

இக்கலவரங்கள் பற்றிய விபரங்களை பொலிசார் தெரிவிக்க மறுத்து விட்டனர். (இ)

ஈரானில் தொடர் பூகம்பம்

தெஹ்ரான் ஜூலை 29

தெக்கிழக்கு ஈரானில் நேற்றிரவு ஏற்பட்ட பூகம்பத்திற்கு 40 பேர் மரணமாகி என்றும் 200 பேர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

இதே இடத்தில்தான் கடந்த மார்ச் மாதத்தில் 100 பேரைப்பலி கொண்ட பூகம்பமும் கடந்த 1978 - ம் ஆண்டு செப்டம்பரில் 15 ஆயிரம் பேரைப்பலி கொண்ட பூகம்பமும் இடம் பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. [இ]

'சமூகத் தொண்டன்' வெளியீடு

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியத்தின் பத்திரிகையான சமூகத் தொண்டன் வேதுபிரதி வெளியீட்டுவிழா தெல்லிப்பழை யூனியன்கல்லூரியில் ஒன்றியத் தலைவர் திரு. வே. ப. வாரித்தம்பி தலைமையில் நடைபெற்றது. ஒன்றிய செயலாளர் திரு. சி. சி. வரதராசா இணைமி நிறுவன அதிபர் திரு. மு. க. பொன்னம்பலம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

வேலையில்லாப் பிரச்னையை தீர்க்கத் திட்டம்

லண்டன், ஜூலை 29

பிரிட்டனில் 28 லட்சம் பேர் வேலையில்லாதிருக்கின்றனர். இது தொடர்பாக பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் அரசாங்கத்திற்கு எதிராக கண்டனத் தீர்மானமொன்று கொண்டுவரப்படவுள்ளது. இதன் எதிரொலியாக பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்க்கரட் தட்சர் வேலையில்லாப் பிரச்னையைத் தீர்க்கத்தான திட்டமொன்றைப் பதினைந்து மேடிஸ்டேரியில் பவுண் செலவில் வகுத்துள்ளார்.

இத்திட்டத்தின் பிரகாரம் கல்லூரி களிலிருந்து வெளியேறும் மாணவர்களுக்கு முதலில் வேலைவாய்ப்பளிக்கப்படும். இவர்களுக்கு வாரமொன்றிற்கு பதினைந்து ஸ்டேரிலிங் பவுண் மானியமாக வழங்கப்படும். (வெ)

விவாகரத்து

[யாழ்ப்பாணம்]

"ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தின்மீது நடத்தப்பட்ட மூர்க்கத்தனமான தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். அரசியல் பிரச்னைகள் ஜனநாயகரீதியிலேயே தீர்க்கப்படவேண்டும். இத்தகைய வன்செயல்களின்மூலம் அரசியல் பிரச்னைகளைத் தீர்க்க நினைப்பது தவறான செயலாகும்."

மேற்கண்டவாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும், கட்டணித்தலைவர் திரு. எம். சிவசிதம்பரமும் ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலையத் தாக்குதல் சம்பவம் குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் கண்டனம் தெரிவித்துள்ளனர்

பொலிசாருக்கு உயர்கல்வி

(கொழும்பு)

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு உயர்கல்வி போதனை அளிக்கவிருப்பதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இவ் உயர்கல்வியானது மருத்துவம், தொலைத்தொடர்பு, போக்குவரத்து நிர்வாகம், பொது நிர்வாகம் ஆகிய துறைகளிலேயே அளிக்கப்படவுள்ளதாக மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வுயர்கல்வி பொலிஸ் படையைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் தரத்திற்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் பயிற்சியளிக்கப்படவுள்ளது.

பக்கவிளைவுமற்ற அனுசரணையுடன் இடம்பெறவுள்ள இவ்வுயர்கல்வி பயிற்சியானது விசேடமாக பொலிசாருக்கென நடாத்தப்படும். வழமையான பக்கவிளைவு அலுவல்களுடன் எவ்வித தொடர்புமும் இருக்கமாட்டாது.

தட்சர் ராஜீவ்காந்தி சந்திப்பு

லண்டன், ஜூலை 29

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் மூத்தபுதல்வர் திரு. ராஜீவ்காந்தி நேற்று பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்க்கிரெட் தட்சரைச் சந்தித்து சுமார் அரைமணி நேரம் வரை பேச்சுநடத்தினார்.

ஆனைக்கோட்டை சம்பவம்:

"சமாதானத்துக்கு பங்கம் விளைவிக்கும் செயலாகும்"

அபிவிருத்திசபைத்தலைவர் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

"ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற தாக்குதலை யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை சார்பிலும் மக்களின் சார்பிலும் கண்டிப்பதுடன் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கும் காயமடைந்தவர்களுக்கும் எம் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்"

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. எஸ். நடராசா வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

"இப்படியான தாக்குதல்கள் ஒழுங்கிற்கும் சமாதானத்திற்கும் பங்கம் விளைவிக்கும் செயலாகும். சமாதானத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பையும் நிலைநாட்ட ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன."

சமாதானத்தைப் பாதிக்கும் நடவடிக்கைகள் எதுவும் மேற்கொண்டு நிகழாவண்ணம் பொதுமக்களும் அதிகாரிகளும் ஒத்துழைக்கவேண்டும். (வ)

'அமிர்' 'சிவா' கண்டனம்

(யாழ்ப்பாணம்)

"ஆனைக்கோட்டைபொலிஸ் நிலையத்தின்மீது நடத்தப்பட்ட மூர்க்கத்தனமான தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். அரசியல் பிரச்னைகள் ஜனநாயகரீதியிலேயே தீர்க்கப்படவேண்டும். இத்தகைய வன்செயல்களின்மூலம் அரசியல் பிரச்னைகளைத் தீர்க்க நினைப்பது தவறான செயலாகும்."

மேற்கண்டவாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும், கட்டணித்தலைவர் திரு. எம். சிவசிதம்பரமும் ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலையத் தாக்குதல் சம்பவம் குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் கண்டனம் தெரிவித்துள்ளனர்

இவ்வறிக்கையில் அவர்கள் மேலும்தெரிவித்துள்ளதாவது:

இந்த சம்பவத்தையடுத்து கலவரம் விடைபெறாமல் இருக்கும் வண்ணம் யாழ்ப்பாண மக்களை நாம் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஆனைக்கோட்டைப்பொலிஸ் நிலைய தாக்குதலின்போது காலமான பொலிசாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

இப்பொலிஸ்நிலையம் தாக்கப்பட்டதும், ஒருவர் கொல்லப்பட்டதும் எமக்கு அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றது என்று அவ்வறிக்கையில் இவர்களிருவரும் தெரிவித்துள்ளனர்.

20ஆண்டுக்கு பின் மீண்டும் திருவிழா

(யாழ்ப்பாணம்)

கடந்த இருபதுவருடமாகத் தடுக்கப்பட்டிருந்த சங்கிலியன் சட்டநாதர்கோவில் இரண்டாம்விதி திறக்கப்பட்டு, இக்கோவில் அம்பாளுடைய திருவிழா கடந்த 24த் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

ஆடிப்பூரத்தன்று தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (வெ)

உதவிப்பொலிஸ் அதிபர்களாக பதவி உயர்வு

(கொழும்பு)

இலங்கை பொலிஸ் சேவையிலுள்ள ஒன்பது பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் உதவிப் பொலிஸ் அதிபர்களாக பதவியுயர்வு பெற்றுள்ளார்கள்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர்களாகிய திரு. ரொனல் பெரேரா, திரு. புஞ்சிபண்டா சேனவிரத்ன, திரு. மொறிஸ் டயஸ், திரு. கு. தர்மசேன, திரு. ஒ. கே. ஹேமச்சந்திரா, திரு. எல். எம். மெண்டிஸ், திரு. எம். ஆரியசேன, திரு. எஸ். சீவரத்தினம் திரு. புண்ணிய சிவா ஆகியோரே உதவிப்பொலிஸ்அதிபர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

இப்பதவி உயர்வு ஆகஸ்ட் மாதம் 1ந் திகதிமுதல் அமுல்கு வருமென பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (து)

4-வது ஹவுஸ்புல் வாரம்
ஹரன் (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு-கஜாதா
நூல் வேலி
(கலர்)

வெல்லி (நகர்)
தினசரி 6-15, 9-30
சனி,ஞாயிறு 3-30
சிவாஜி- விஜயா
செல்வம்

வெலிங்டன்
தினசரி 10-30, 2-30, 6-30 & 9-30
சிவாஜி - மஞ்சுளா
எங்கள்
தங்காராஜா

ஸ்ரீதேவி (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-00, 4-00, 7-00, 9-45
Daily 10-30, 2-15, 4-45 7-00 & 9-30
JAWS

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-15, 6-30, 9-45
பாக்கியராஜ்-அஸ்வினி-சங்கிலி முருகன்
ஒரு கை ஓசை

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 4-00, 7-00, 9-45
Till 2-8-81
DR. JEKYLL AND SISTER HIDE
வெகு விரைவில்
சங்கராபரணம்

சாந்தி (யாழ்நகர்)
இன்று மட்டும்
10-30, 2-30, 4-45, 7-00, 9-30
JAMECO JRI in
SKY RIDERS Scope Color

நாளை
வீ. பி. கணேசனின் 'நாடு போற்ற வாழ்க'

ராணி (யாழ்ப்பாணம்)
10-30, 2-15, 6-00, 9-30
சிவாஜி, ஜெயசித்ரா, கமலஹாசன், மஞ்சுளா, நாகேஷ்
சத்யம்
(புத்தம் புதிய பிரதி)

எமது அடுத்த வெளியீடு
பாக்கியராஜாவின்
சுவர் இல்லாத சித்திரங்கள்

வெற்றிகரமான 3-வது வார
ஹவுஸ்புல் காட்சிகளாக
ஓடிக்கொண்டிருக்கின்றது
ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-15, 6-00, 9-30
எம். ஜி. ஆர், லதா
பல்லாண்டு வாழ்க
[சுன்மன் கலர்]

வின்சர் தினசரி 10-30, 2-00, 4-30, 7-00 (யாழ்ப்பாணம்) 9-30
Charlton Heston and James Coburn
Meet in a Hard - Hitting Tale of the old West
THE LAST HARD MEN
[பழிக்குப் பழி]
Color

3 - 8 - 81 முதல்
ஜெய்கணேஷ் - ஸ்ரீபிரியா - நம்பியார்,
ராதாசலூஜா நடித்த
நீலக்கடலின் ஓரத்திலே

மன்னாரில்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மறை மாவட்டமாக்கவேண்டுமென கேட்டுவந்தனர். அவர்களின் கோரிக்கை இன்று நனவாகிவிட்டது. அத்தோடு பாலோடு பழம் சேர்ந்தாற் போல் தலைமை தகுதியும் அறிவும் நிரம்பிய பேரருட் திருதேமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை இப்புதிய மறைமாவட்ட ஆயராக இன்றிலிருந்து நியமிக்கப்படுகிறார். இவரின் தலைமையில் மன்னார் மறை மாவட்டம் சிறப்பதுடன் தமிழ்த்தேசிய இனத்திற்கும் கிறிஸ்துவைப்போல் பெருஞ் சேவையாற்ற வாழ்த்தி விடை பெறுகிறேன்".

இன்றைய பலன்

ஆடி மாதம் 15ம் திகதி
விளாழக்கிழமை
(30- 7 - 81)

மேடம்: புதிய துறையில் ஈடுபடுவீர்கள். வியாபாரிகளுக்கு நல்ல முன்னேற்றமுண்டு. புதிய முதலீடுகளுக்கு சிறப்பான தினம். சிலருக்கு மனைவட்டம் ஆர்வம் பிறக்கலாம், நல்லதினம்.

இடபம்: வாகனச் சொந்தக்காரர்களுக்கு வாகனம் பெருகும். ஆசிரியர்களாகிய அவர்கள் பணி சிறப்பாக இருக்கும். சிலருக்கு ஆராய்ச்சிகளிலும் ஆர்வம் பிறக்கும். பொன்னான தினம்.

மிதுனம்: இதயத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கும். இனிய சனம் கூடுவர். புத்திரசுகத்துடன் தொழிற்துறையில் வெற்றி கிடைக்கும்.

கடகம்: உங்கள் நடவடிக்கைகள் அனைத்தும் இன்று கவனிக்கப்படும். தொழிற்துறையில் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு சதி நடைபெறலாம். சாமர்த்திய பேச்சாலும் வலிந்துக்கொள்ளாறு ஏற்படலாம்.

சிங்கம்: இன்பம் உங்களைத் தாலாட்டும். புதிய உறவு முறைகளால் மகிழ்ச்சியடைவீர்கள். எதிர்பார்த்த வருமானம் கிடைப்பதன்மூலம் இதயம் பூரிப்படையும். நல்ல நாள்.

கன்னி: பிரச்சினைகள் மேலும் சிக்கலாகும். உறவு விட்டுப் பிரியக்கூடிய நிலை ஏற்படும். கூர்மையான ஆயுதங்களுடன் பழகாதிருப்பது நன்று, உடல் நலனில் அதிக கவனம் வேண்டும்.

துலாம்: குடும்ப வாழ்க்கை இன்று சமாக இருக்கும்: தூரத்திலிருந்து உறவினர் ஒருவர் உங்களுடன் ஒத்துழைப்பதற்கு முன்வருவார். வாக்குவாதங்களுக்குச் சிறப்பான தினம்.

விருச்சிகம்: செய்தொழிலில் சிறப்பான இடம் கிடைக்கும். வெளியூர் அன்பர்கள் உங்களை வரவேற்க தயாராகாதிருப்பர். முயற்சிகளுக்கு தெய்வத்தின் துணை உண்டு.

தனு: மெத்தவும் பொருள் சேரும் மேலிடத்து ஆதரவு தப்பாமல் கிடைக்கும், நித்தியத்தை செம்மையுடன் தேனாக வாழ்வும் உண்டு.

மகரம்: வாழ்க்கையில் புதிதான நிலை தென்படும். எதிலும் தாக்க மனப்பான்மை உருவாகும். சினேகிதவழியால் சுகம் தோன்றக்கூடும். மனத்திடம் வேண்டும்.

கும்பம்: உமது சொந்த வாழ்க்கையில் மற்றவர்கள் குறுக்கிடுவார்கள். குடும்பத்தில் சிறு பூசல் தோன்றி மறையும்.

மீனம்: குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும். உறவினர் ஒருவரின் வருகை உற்சாகத்தை அளிக்கும் எதையும் அலசி ஆராய விரும்புவீர், அடக்கம் வேண்டும்.

சோதிட வாரிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

விதைநெல்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

நெல்லில் அரிசியில் கலப்படம் குடிகொண்டிருக்கும் சமுதாயத்தில் வாழும் நாம் எமது பழைமையான பண்பைத் திரும்பிப்பார்க்க வேண்டும்

"விதி துமிட வேண்டுங் கொல்லோ விருத்தோம்பி மிச்சில் மிசைவான் புலம்"

நாகம்ஸ் (கல்லூரி)
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
எஸ். எஸ். ஆர்.
சங்கிலித்தேவன்

யாழ். மாவட்ட சபைக் கூட்டத்தில்

— கே. ஜோகநாதன் —

பண்டிதர் கா. பொ. இரத்தினம் (எம். பி.) கண்ணகியின் பக்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தின்மீது 1 மாத காலத்தில் நுண்கலை தொழிலை திறக்கப்பட்டு 25 மாணவிகள் பயிற்றுவிக்கப்பட்டனர். பின் 8 மாணவிகள் பயிற்று இன்று ஒரு மாணவியும் இல்லாமல் மூடப்பட்டுள்ளது. இதனை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கே. இராஜலிங்கம் (எம் பி): பிள்ளைகள் அங்கு இல்லாவிட்டால் அதனை வேறு இடத்திற்கு மாற்றலாம்.

∴ ∴ ∴

பண்டிதர் கா. பொ. இரத்தினம்: தொகுதி எம். பியின் அனுமதி இல்லாமல் யுக்குடுவே நுண்கலை நெசவுநிலையம்கட்டி, இப்படி விஞ்ஞாபிட்டதுபற்றி விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தலைவர்: நாகராசா! நல்லூர் கிராமசபையில் மிக்சாரத்திற்கு ராஸ்பேயர் ஒன்று அமையும். கிராமசபையை நடத்த பொறுப்பான ஒருவர் நியமிக்கப்படாததினால் வேலை நடைபெறவில்லை.

எஸ். சின்னத்துரை: வேறு விடயங்கள் நேரத்தில் ஏன் பிரேரணையை எடுக்கலாமா?

தலைவர்: முடியாது, முடியாது 7 நாள் முன்னறிவித்தல் கொடுத்து நிகழ்ச்சி நிரலில் இடம்பெறவேண்டும்.

எஸ். சின்னத்துரை: நிர்மலையில் வரி அறவிடுவது பற்றிய பிரேரணை அது.

தலைவர்: சபை அனுமதியுடன் அத்தியாவசியமான தீர்மானங்களை மட்டும் கொண்டுவரலாம்.

எஸ். சின்னத்துரை: இது அவசியமான பிரேரணை.

தலைவர்: இப்படியான பிரேரணைகள் அவசியம் எனக் கூறிக் கொண்டுவரத் தொடங்கினால் சபை ஒழுங்காக நடக்காது.

∴ ∴ ∴

எஸ். சின்னத்துரை: உள்ளூராட்சி சபை ஊழியர்கள் ஒழுங்காக வேலை செய்வதில்லை 'வாச்சர்'கள் [காவலாளி] சரியான நேரத்திற்கு கடமையாற்றுவதில்லை.

தலைவர்: அவர்களுக்கு வாச்சர் வைக்க வேண்டுமா? [சிரிப்பு]

∴ ∴ ∴

எஸ். சின்னத்துரை: பாடசாலையில் கட்டடங்கள் இருந்தால் பிள்ளைகள் இல்லை. பிள்ளைகள் இருந்தால் கட்டடங்கள் இல்லாது. அதிபர் ஆசிரியர் செயலால் நிலைமை பிரச்சினையாக இருக்கிறது. காசு சேர்த்து கட்டடம் கட்டுகிறார்கள். அங்கு வகுப்புகள் நடைபெறுவதில்லை.

∴ ∴ ∴

வெ. பேரம்பலேஸ்வரன் [எம். பி.]: சீநோர் தொழிற்சாலை நட்டத்தில் இயங்குவதாக அதனை தனியாரிடத்தில் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதனால் நூற்றுக்கணக்கான தொழிலாளர் வேலை இழக்கப்போகிறார்கள். மாவட்ட சபை இந்த தொழிற்சாலையை பொறுப்பேற்று நடத்துவதுபற்றி நடவடிக்கை எடுக்கவேண்டும். தனியாரிடம் மாறுவதைத் தடுக்க உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

∴ ∴ ∴

பண்டிதர் க. பொ. இரத்தினம்: இச்சபையில் எம். பிகளும் இருப்பதால் பாராளுமன்றக் கூட்டம் நடக்கும் நாளன்று தவிர்ந்த இச்சபை கூட்டங்களை கூடவேண்டும்.

∴ ∴ ∴

பண்டிதர் க. பொ. இரத்தினம்: இலங்கையிலுள்ள 24 சபைகளுக்கும் அபிவிருத்திசெய்ய அரசும், அமைச்சரும் தனிப்பட்ட முறையில் பணம் கொடுத்தால் அதனைப் பயன்படுத்த வேண்டும். வேறு விடயத்திற்கு ஒதுக்கியதை செலவிடக் கூடாது.

∴ ∴ ∴

தலைவர்: விபரம், உறுப்பினர்களுக்கு அவ்வப்போது சமர்ப்பித்திருக்கிறோம் வேண்டிய விபரம் முழுதும் தரப்பட்டுள்ளது. இதில் அதிகநேரம் செலவிடத்தேவையில்லை. செயலாக வேண்டிய நடவடிக்கை எடுத்துள்ளது.

தலைவர்: உறுப்பினர்கள் கருமத்தை நிறைவேற்ற வேண்டும். வீணாக பேசி நேரத்தை போக்கக்கூடாது. விவாதத்தை முடித்துவிட்டீர்களா?

கே. துரைரத்தினம் [எம். பி.]: அறிக்கையை முழுக்க படிக்க முடியவில்லை எல்லாருக்கும் வயது போய்விட்டது. அச்சுக்கள் தெரியவில்லை.

தலைவர்; மெதுவாக பேசாதீர்கள் கொஞ்சம் பலத்து பேசுங்கள் எல்லோருக்கும் கேட்க வேண்டும்.

கே. துரைரத்தினம்: பக் முகப்படுத்தப்பட்ட வரவு செலவு கட்டத்தில் 2 கோடி 70 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது, 90 லட்சம் மட்டும்தான் கிடைத்திருக்கிறது. மிச்சத்தை பெற முயற்சிக்கவேண்டும், எதற்கும் மக்கள் எம். பி. களைத்தான் கேட்பார்கள்.

தலைவர்: நீங்களும் முயற்சியுங்கள்.

∴ ∴ ∴

கே. துரைரத்தினம்: சபையில் 15 விடயங்களுக்குள் எங்கள் விடயம் வரவில்லை, அதிகாரங்கள் பற்றி தெரியவில்லை.

தலைவர்: அதனை நாங்கள் நிர்ணயித்து கொடுக்கிறோம்.

பண்டிதர் க. கா. பொ. இரத்தினம்: நான் மீண்டும் ஒரு விடயம் பற்றி கூறுகிறேன்.

தலைவர்: அனுமதியெடுமல் பேசக்கூடாது. ஒருமுறை பேசிவிட்டீர்கள். மற்றவர்களும் பேசவேண்டும்.

பண்டிதர் கா. பொ. இரத்தினம்: இது முக்கிய விடயம்.

தலைவர்: அப்படியானால் குழு நிலைக்கு மாறவேண்டும்.

பண்டிதர் கா. பொ. இரத்தினம்: முக்கியமான விடயம் பேசவேண்டும்.

தலைவர்: அப்படியானால் சபையின் அனுமதிபெற வேண்டும்.

பண்டிதர் கா. பொ. இரத்தினம்: சபையின் அனுமதியுடன் பேசுகிறேன்.

(நாளை மிகுதி)

எம்மிடம்.....
இறக்குமதிசெய்யப்பட்ட

றெக்கின் குளோத்
பிளாஸ்டிக் குளோத்
(F) போமிக்கா சீற்
பொலித்தின் வகைகள்
ஒட்டுப்பசை வகைகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெறலாம்.

எச்.இஸ்மாஸ்ஜி அன்கோ
71-73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். போன்: 8016

வான் சாரதி வெற்றிடம்

பத்து வருட சாரதி அனுபவமும்; 40 வயதுக்கு மேற்படாதவராயும்; கார், வான் ஓடக்கூடிய சான்றிதழ்கள் உள்ளவராயும்; கடமையை நேர்மையாகச் செய்யக்கூடியவராயும் இருத்தல்வேண்டும். சம்பள விபரம் நேரில். முடிவு தேதி: 5-8-81

விண்ணப்பிக்கும் முகவரி: விளம்பர இல. 141
ஈழநாடு, யாழ்ப்பாணம்.

கேள்வி அறிவித்தல்

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவ காலத்தில் 20-08-1981 முதல் 30-08-1981 வரையும் நல்லூர்க் கல்யாண மண்டப வளவுள் தொடர்ச்சியாக திறந்திவைத்து இரவு 6-00 மணி முதல் இரவு 9-00 மணியளவும் உபயோகிக்க 50 மீடிறன் [கேட்ஸ்] 400/230 உவோல்ற் 10 முதல் 25 வரையான இ. வோ. அ. கொண்ட ஆடவோட்ட பிறப்பாக்கி ஒன்று தேவை. [ஜெனரேட்டர் 10—25 கி. வோட், 400/230 வோல்ட் 60 சைக்கிள் ஏ. சி.] இச்சேவையை வழங்கக்கூடியவர்கள் நாளொன்றுக்குத் தாங்கள் கோரும் கூறுவிலையைக் குறிப்பிட்டுப் பதிவு அஞ்சல் மூலம் "ஆணையாளர், யாழ்ப்பாண மாநகராட்சிமன்றம்" என்ற முகவரிக்கு 06-08-1981-ஆம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

க. சிவஞானம்
ஆணையாளர்,
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
29-07-1981. 0467

உங்கள் முதலீட்டிற்கு
27% வரை வட்டி
வழங்குகின்றோம்
அத்துடன் உங்களுக்கு
★ ஆயுள் காப்புறுதி இனாம்
★ வீட்டுப்பாவனைப் பொருட்கள்
(பணம் கொடுப்பனவு தவணை அடிப்படையில்)
நாம் உங்களுக்கு 41 வருடங்களாகச் சேவை செய்துவருகின்றோம்
என்பதைப் பெருமையுடன் கூறிக் கொள்ளுகின்றோம்.
★ நம்பிக்கை
★ பாதுகாப்பு
★ ஸ்திரத்தன்மை
வடமாகாணத்திலேயே ஆகக்கூடிய முதலீட்டாளர்களைக் கொண்ட ஒரே ஒரு தனியார்துறை நிதிநிறுவனம்
த பினான்ஸ் கம்பனி லிமிட்டெட்,
TFC
191, 249 சி, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம், போன்: 7680

கிராமசேவை அலுவலர்கள் தமது பிரிவுகளிலேயே தங்கவேண்டும்

உதவி அரசாங்க அதிபர்களிடம் மாவட்ட அமைச்சர் வற்புறுத்து

[யாழ்ப்பாணம்]

உதவி அரசாங்க அதிபர்கள் அனைவரும் தங்கள் பகுதிகளில் உள்ள கிராமசேவை அலுவலர்களுடன் மூலம் பொலிசாருடன் ஒத்துழைத்து அமைதியைப் பாதுகாக்க உதவும்படி மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன் கேட்டுக்கொண்டுள்ளார்.

வடபகுதியிலுள்ள சகல உதவி அரசாங்க அதிபர்களையும்கொண்ட மாநாடொன்றை நேற்று மாவட்ட அமைச்சர் நடத்தினார். அரசாங்க அதிபரும், யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைச் செயலாளர் திரு. தேவநேசன் நேசையாவும் இந்த மகாநாட்டில் கலந்து கொண்டார்.

உதவி அரசாங்க அதிபர்கள் உடனடியாகத் தங்கள் பகுதிக் கிராம சேவை அலுவலர்களைக் கூட்டி, ஒரு மகாநாட்டை நடத்தும்படியும் கிராம சேவைஅலுவலர்கள் ஒவ்வொருவரும் அத்தமது பிரிவுகளிலேயே தங்கியிருக்கும்படி பணிப்புரை வழங்கும்படியும் மாவட்ட அமைச்சர் வற்புறுத்தினார்.

கிராம சேவை அலுவலர்கள் தம் பிரிவுகளில், கொள்ளைகள், கொலைகள் போன்ற வன்செயல்கள் பற்றிய தகவல்களைத் திரட்டுவதற்குப் பொலிஸாருக்கு உதவும்படியும் வற்புறுத்தும்படி உதவி அரசாங்க அதிபர்களை மாவட்ட அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

கிராம சேவை அலுவலர்களின் மகாநாடு பற்றிய விபர அறிக்கை ஒன்றைத் தமக்கு அனுப்பும்படியும் மாவட்ட அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

கிராமங்களில் புதிதாக நடமாடுபவர்கள், திடீர் பணக்காரர்கள், சந்தேகத்திற்கு இடமானவர்கள் போன்ற விபரங்களை உடனுக்குடன் உதவி அரசாங்க அதிபர்களுக்கு கிராம சேவை அலுவலர்கள் அறிவிக்கவேண்டும். அதேபோல், தமது பிரிவுகளிலுள்ள மூன்றுத் தவறணைகள், மதுபான விற்பனை நிலையங்கள், சட்ட விரோத மதுபான நிலையங்கள் போன்றவற்றை நேரடியாகக் கண்காணித்து விபரம் சேகரிக்கும்படியும் கோரப்பட்டுள்ளனர்.

உதவி அரசாங்க அதிபர்கள் தங்கள் பகுதிகளிலேயே தங்கி இருக்கவேண்டும் என்றும் மாவட்ட அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இந்து மகளிர் கல்லூரி முதலிடம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தினால் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட பாடசாலைத் தோட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி முதலிடத்தைப் பெற்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பதினொரு வட்டாரங்களிலுள்ள பாடசாலைகள் இப் போட்டியில் பங்குபற்றியிருந்தன.

ஆறு பொலிஸ்..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இராணுவம்உஷார்

இதற்கிடையே, இராணுவத்தினர் உஷார்படுத்தப்பட்டுள்ளனர்: இவர்கள், பாதுகாப்பு ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள் என்று அறியப்படுகிறது.

வெளி மாவட்டத்திலிருந்து சுமார் 500 இராணுவ வீரர்கள் நேற்றிரவு யாழ். நகர் வந்து சேரவிருந்தார்கள்,

தேசிய பாதுகாப்பு குழு கூடியது

ஆனைக்கோட்டைப்பொலிஸ் நிலையத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தையடுத்து நாட்டின் சகல பாகங்களிலும் இராணுவ, பொலிஸ் பாதுகாப்புக்கள் விஸ்தரிக்கப்பட்டு பலப்படுத்தப்பட்டுள்ளன.

இச்சம்பவத்தையடுத்து பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் திரு. டி. பி. வேரப்பிட்டியாவினால் தேசிய பாதுகாப்புக் குழு அவசரமாகக் கூட்டப்பட்டது. இக்கூட்டஅறிக்கை விபரம் பிரிட்டனில் தற்போது இருக்கும் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிகேடியர் வீரதுங்கா, பொலிஸ் மாஅதிபர் அனுசெனிவரத்ன ஆகியோரைக் கொண்டகுழுவொன்றுவிசேடமாக யாழ்ப்பாணம் வந்து விசாரணையில் ஈடுபட்டதுடன் பாதுகாப்பு நிலைமைகளை நேரில் அவதானித்ததாகத்தெரிகிறது.

கொழும்பு பொலிஸ்தலைமையகத்துக்கு தெரிவிக்கப்பட்ட ஆனைக்கோட்டையில் காணாமற்போன ஆயுதங்கள்பற்றிய விபரங்களில் 17 ரைபிள்களும் மூன்று ரிப்பீட்டர் குழல் துப்பாக்கிகளும் மூன்று ஒற்றைக் குழல் துப்பாக்கிகளும் அத்துடன் மூன்று உப இயந்திரத் துப்பாக்கிகளுக்கான தோட்டாக்களை உள்ளடக்கிய பைகளும் 528 சுழல் வெடிமருந்துகளும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுண்டிக்குளம் கொலைவழக்கு: எதிரிகள் நால்வரும் விடுதலை

[யாழ்ப்பாணம்]

சுண்டிக்குளம் கொலைவழக்கில் எதிரிகள் நால்வரும் விடுதலைசெய்யப்பட்டனர்.

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். ஜாமில் முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டது.

இவ்வழக்கில், சுண்டிக்குளத்தில் 79 மே 17-ம் திகதி தங்கராசா அல்லது தோமஸை கொலைசெய்ததாக தாமோதரம்பிள்ளை, தா. இரத்தினம், து. கணபதிப்பிள்ளை அல்லது கந்தையா, த. பூபாலசிங்கம் அல்லது நவரத்தினம் ஆகியோர் மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

1ம், 2ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி வி. என். நவரத்தினம், சட்டத்தரணிகள் சி. அம்பிகைபாலன், வி. சத்தியநாதன், எஸ். சுரேந்திரன் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜராஞர். 3ம் எதிரி சார்பில் சட்டத்தரணி சி. அம்பிகைபாலன்சட்டத்தரணி திருமதி அம்பிகைபாலன் ஆகியோரும் 4-ம் எதிரிசார்பில் சட்டத்தரணி ஆர். சிறிசிவாயா, சட்டத்தரணி செல்வி நளினி நவரத்தினம் ஆகியோர் ஆஜராஞர்கள். அரசதரப்பில் சட்டத்தரணி ஐ. ஞானதாசன் ஆஜராஞர். ஜூரி சபையினர் ஏகமனதாக எதிரிகள் நிரபராதிகள் என முடிவுசெய்ததைத் தொடர்ந்து நீதிபதி அவர்களை விடுதலைசெய்து தீர்ப்பளித்தார்.

பாதுகாப்பு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சபை செயலாளரும்' நேற்று முன்தினம், யாழ் பெரிய ஆஸ்பத்திரிக்கு சென்று காயமடைந்தவர்களை பார்வையிட்டனர்.

வன்செயலை தடுப்பதற்கு...

ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையம் இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்ட தினத்துக்கு மறுதினம் யாழ்நகரில் மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கூன், அரசாங்க அதிபர் திரு. தேவதேசன் நேசையா, மேலதிக அரசாங்க அதிபர் திரு. பஞ்சலிங்கம், உதவி அரசாங்க அதிபர் ச. பொ. பாலசிங்கம் ஆகியோர் இரவு வெகுநேரம்வரை யாழ். நகரில் இருந்து நிலைமைகளை அவதானித்தனர்.

தேன்நிலவு

லண்டன், ஜூலை 39

பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ், தமது மனைவி டயானா சீமாட்டியுடன் மத்தியதரைக்கடலில் மிதந்து கொண்டிருக்கும் பிரிட்டிஷ் கப்பலில் தேன்நிலவைக் கழிக்கிறார்.

தேவை

உழவு யந்திரசாரதி, 3 வருட அனுபவம்வேண்டும். வேலை இடம்: கிளிநொச்சி. நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில்வரவும். சம்பளமும், ஊக்கப்படியும் உண்டு. 129, கோவில் வீதி, யாழ்ப்பாணம். 0465

வெற்றிடம் - லிகிதர்

யாழ்ப்பாணத்திலுள்ள நிதிநிறுவனமொன்றுக்கு, ஒவ்வொரு வார இறுதியிலும் கொழும்பு சென்று, கம்பெனி அலுவல்களை நிறைவேற்ற தகுதியான, அனுபவமிக்க ஒருவர் தேவை. சிங்களமொழிப்புலமை மேலதிக தகுதியாகக் கணிக்கப்படும். விண்ணப்ப முடிவு திகதி: 05-08-81

விண்ணப்ப முகவரி:
விளம்பர இல: 122,
மே|பா. ஈழநாடு, யாழ்ப்பாணம்.

வானில் வியாபாரம் செய்பவர் தேவை

வானில் வியாபாரம் செய்யக்கூடிய அனுபவம் உள்ளவரும், பொருளாதாரம் உள்ளவரும், ஆங்கில அறிவு உடையவரும் விண்ணப்பிக்கவும் சம்பள விபரம் நேரில்:

முடிவு திகதி: 7-8-81

விண்ணப்ப முகவரி:
விளம்பர இல: 141, ஈழநாடு, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 803ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981ம் ஆண்டு ஜூலை மாதம் 30-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office SrLanka
Regd No. QB 100886/81 P. O. Box 49, Jaffna. தொலைபேசி 7707, 389, 8126